ஞாயிறு வெளியீடு | ஆண்டுச் சந்தா ரூபா 5 தனிப் பிரதி 0—1—3 | இலங்கை 10 சதம் மலாய் நாடு 8 காசு | REGD. No. M. 4642

# திராவிடநாடு

மலர் 5 | காஞ்சிபுரம் 2—6—46 | இதழ் 6

## ★ ரங்கோன் ராதா! ★

சௌமியன்.

"நண்பா! என் தாயார் சொல்லிக்கொண்டு வந்த கதையைக் கேட்டு எனக்கு அளவு கடந்த ஆச்சரியமும் திகைப்பும் ஏற்பட்டது. என் எதிரே உட்கார்ந்து கொண்டு, சுமார் 20 வருஷங்களுக்கு முன்பு தான் இறந்ததையும் சுடலையில் தன் பிணத்துக்கு நெருப்புவைக்கப்பட்டதையும், தீ நன்ருகப் பிடித்துக் கொண்டதையும் சொன்னல், கேட்பதற்குஎவ்வளவு திகைப்பாகஇருக்கும்.நான்இருந்த நிலையைக்கண்டு என் தாயார்மெள்ளச் சிரித்துவிட்டு, "தம்பி! என் கதையைக் கேட்டுக் கலக்கமடைகிருய். ஒரு வேளை எனக்கு மூளை புரண்டுவிட்டதோ என்றுஎண்ணுகிருயோ என்னவோ. நீ மட்டுமா, யாரிடம்சொல்லப்போனுலுந்தான் இப்படித் திகைப்பார்கள். ஆனல் நான் முதலிலேயே சொல்லிவிட்டேன் உன்னிடம். நான் உண்மையை, முழு உண்மையைக் கூறுகிறேன். இன்னெருவர்நம்பவேண்டும், அதனல் எனக்கொருபலன் ஏற்படவேண்டும் என்பதற்காக அல்ல. என் நெஞ்சிலேநெடுங்காலமாக இருந்துவரும் பாரத்தைப் போக்கிக்கொள்ள. ஆகவே, ஆச்சரியம் திகைப்பு எது ஏற்பட்டாலும், பொருட்படுத்தாமல், என் கதையைக் கொஞ்சம் பொறுமையாகக்கேள்" என்று கூறிவிட்டுக், கதையைத் தொடர்ந்து கூறலானர்கள்.

"கோட்டையூர் மக்களுக்கெல்லாம், நான் இறந்துவிட்டதாகத்தான் எண்ணம். என்அப்பா, வீரராகவ முதலியாரும் அப்படியே தான் நினைத்தார். உற்ருர் உறவினரும் அதுபோலவேதான் எண்ணிக் கொண்டனர். மயானத்துக்கு கோட்டையூர் மக்கள் வந்ததும், அந்த நினைப்போடுதான். ஆனல் உண்மை, எனக்கும், உன் அப்பாவுக்கும் மட்டுமேதெரியும். இறந்துபோனது நானல்ல என்பது, அவருக்கும், எனக்கும் தெரியும். நாங்கள் இருவரும் கலந்துபேசியே, நான் இறந்துபோனதாகக்கூறிவிடவேண்டும் என்ற முடிவுசெய்தோம்.

இரவு மணி பத்துக்குப், பிணம் வேகத்தொடங்கிற்று, அதே நேரத்திலே நான்வேகமாக, ஊரைவிட்டு வெளி ஏறிக் கொண்டிருந்தேன்; முடிதரித்தமன்னரும்முடிவிலொரு பிடிசாம்பலாகப்போவர்என்ற் பழமொழிப்படி, நான் வெந்து நீருனேன்என்றுமக்கள்பேசிக்கொண்டிருந்த சமயம், நான், காவி உடையுடன், கையில் திருவோட்டுடன், காளி கோயில், கார்த்தவராயன் கோயில்ஆகியஇடங்களிலேபிச்சை எடுத்துக் கொண்டிருந்தேன். கூந்தல்கிடையாது. மழுங்கமொட்டையடித்துக்கொண்டிருந்தேன்.ஆமாமடா கண்ணே! உன் அன்னை இந்த அலங்கோல உருவிலே அலைந்து கொண்டிருந்தபோது தான், உன் அப்பாவிடம், ஊரார், "என்ன செய்யலாம்! நீங்கள் கொடுத்துவைத்தது அவ்வளவு தான். புண்யவதி உமது மனைவி. பூவோடும் மஞ்சளோடும் போய்ச் சேர்ந்துவிட்டாள் பாபம்." என்று ஆறுதல் கூறிக்கொண்டிருந்தனர். நான் இறந்துவிடவில்லை; ஓடி விட்டேன்; அவருக்குத்தெரிந்தே ஓடிவிட்டேன், என்பது உன் அப்பாவுக்கு மிக நன்ருகத் தெரியும். எப்படித்தான் அவர், தன்னிடம்தேறுதல் மொழி கூறவந்தவர்களோடு பேசினூரோ, எனக்குத்தெரியாது. கோட்டையூர்மக்கள்,நான்இறந்துவிட்டேன் என்று தீர்மானித்துவிட்டனர், ஆனல் பாபம், இறந்தது உண்மையில், ஒரு பிச்சைக்காரி! இறக்கக்கூடவில்லை, கொல்லப்பட்டாள். ஆமாம், கண்ணு! சாந்த சீலர், சத்யவந்தர், என்று புகழப்படும் உன் தகப்பனுரால் கொல்லப்பட்டாள். என்னைக் கொல்ல, அவர் ஒரு இரகசிய ஏற்பாடுசெய்திருந்தார். அதிலேஅவள் சிக்கிக்கொண்டாள் பாபம், செத்தாள். கேள், உன் தகப்பனுரின் கெடுமதி சென்றவிதத்தை. கொஞ்சம் பழைய கதை கூறவேண்டும், இதற்கு.

கோட்டையூர் வீரராகவ முதலியார், அதாவது உன்தாத்தாவுக்கு இரண்டு பெண்கள்—ஆண் வாரிசு கிடையாது, நான்மூத்தவள்.இரண்டாவது பெண்தான், உன் சிற்றன்னை தங்கம்.

என்னை, உன் அப்பாவுக்கு ஏற்பாடு செய்தபோது, வீரராகவ முதலியாருடைய மிட்டா சம்பந்தமாகப்பெரியகேஸ்நடந்து, தோற்றுவிட்டது. கொஞ்சம் அவர்நொடித்துப்போயிருந்தார். ஆகவே, என் கலியாணத்தின்போது, அதிகமான சீர் செய்யவில்லை. ஆடம்பரம் அவ்வளவும் உன் அப்பாவின் செலவிலேயே நடந்தது. விசாரத்தில் மூழ்கிய வீரராகவமுதலியார்,கேஸ்தன் பக்கம்ஜெயித்திருந்தால், எனக்கு மாங்காய் மாலையும் மரகதமணியும், கல்இழைத்த ஒட்டியாணமும்காசு மாலையும் பூட்டி இருக்கலாம், கச்சேரியும் காலட்சேபமும் வைத்திருக்கலாம் என்று கூறினர். ஒன்றும் செய்யமுடியாத நிலை. பெரிய குடும்பம். நல்ல பரம்பரை. ஒரு காலத்தில் ஓஹோ என்று வாழ்ந்தவர்கள். அப்படிப்பட்டஇடத்திலே சம்பந்தம் கிடைத்ததே ஒரு பெருமை என்று உன் அப்பா இருந்துவிட்டார். அவருடைய குடும்பம் பரம்பரைப்பணக்காரக்குடும்பமல்ல. உன் அப்பாவின் திறமையால் சொத்துச்சேர்ந்தது.

என்னைக் கலியாணம் செய்து கொண்டதால்,சந்தோஷமும்பெருமையும் அடைந்தார் உன் அப்பா. என்னை அன்பாகவே நடத்தினர். வீட்டை மிக அக்கரையாகக் கவனித்து வந்தார். பிறந்தஇடத்திலே இருந்ததைவிட, அதிகச் சந்தோஷமாகவே புகுந்த இடத்திலே, வாழ்க்கை இருந்தது. சொத்துப்போனுலும் கவலையில்லை, எனக்குத் தங்கமான மருமகன் கிடைத்தான், என்மகள் ரங்கம், அங்கு ராஜாத்திபோல் இருக்கிருள், ஒரு குறையும் இல்லை; அவள் நிம்மதியாக வாழ்வதைக் கண்குளிரக் காண்கிறேனே, அதுவேபோதும் எனக்கு என்று, என்அப்பா சொல்லுவார். நான், சில வருஷங்கள் மிகவும் சந்தோஷமாகக் காலங்கழித்தேன். கனவிலும் நான் எண்ணியதில்லை, என் கதி பிறகு இப்படி எல்லாம் மாறும் என்று. சீமாட்டிபோலிருந்துவந்த நான், கேவலம் நாடோடியாகி, நாதியற்றவளாகி, குடிகாரனுக்குக் கூத்தியாகிப் பாழாவேன்என்று எண்ணியதில்லையடா அப்பா. எப்படி நான் எண்ணமுடியும்? இப்போது அந்தக் காட்சி, நன்ருகக் கவனமிருக்கிறது. உன் அப்பா, நாலைந்து வீடுகளுக்கு அப்பால்நடந்துவரும்போதே,எனக்கு ஜாடை தெரிந்துவிடும்! அவருடைய கால் செருப்பு, ஒருவிதமான 'கிறீச்' என்ற சத்தம் கொடுக்கும். அந்தச் சத்தம் எனக்குச் சங்கீதம். அதைக்கேட்டதும், முகம்மலரும். துள்ளி எழுந்திருப்பேன், கண்ணாடிமுன்நிற்பேன், குங்குமத்தைச் சரிப்படுத்திக்கொள்வேன். வாசற்படியில் கால்வைக்கும்போதே அவர் வாஞ்சையுடன், "ரங்கம்!" என்று அழைப்பார். ஓடிப்போய், கால் கழுவச் செம்பில் நீர் தருவேன். அவர் கழுவி முடிப்பதற்குள் கை துடைக்கத் துணி தருவேன். துடைத்துக்கொண்டிருக்கும்போதே, தலைவாழையிலையில் தண்ணீர்தெளிப்பேன். மணைபோடுவேன். அவர் நெற்றியில் விபூதி தடவிக்கொண்டு, வந்து உட்காருவார் மணையில். ஒரு மணி நேரமாகும் சாப்பிட்டு முடிக்க, இடையிடையே அவ்வளவு வேடிக்கையாகப் பேசுவார்! மகனே! அந்த இன்பவாழ்விலே ஈடுபட்டிருந்தபோது, இந்தக் கதி எனக்கு நேரிடும் என்று, எப்படியடா, எண்ணம் பிறக்கமுடியும்? குடும்பம் என்று இருந்தால், தர்மலிங்கமுதலியார் வீட்டுக்குடும்பம்போலிருக்கவேண்டும், என்றுகோட்டையூரில் பேசிக்கொள்வார்கள். எனக்கு மாமி, நாத்தி, மைத்துனர் யாரும் கிடையாது. நானும் அவரும்தான். வேலைக்கு ஆள் உண்டு. ஆள்அடிக்கடி மாறுவதுண்டு.

தாகுமண்டி தர்மலிங்க முதலியார், என்ருல் யாருக்கும் ஒரு பற்றுதல், மரியாதை, நம்பிக்கை. இதற்கு முக்கிய காரணம், அவருக்குப் பணத்தாசையே கிடையாது என்பதுதான். நான்கூட, மற்றவர்களைப் போலவே, உன் அப்பாவுக்குப் பணத்தாசை கிடையாது என்றே நினைத்தேன். அவ்வளவு திறமையாக உன் அப்பா நடித்துவந்தார். உள்ளமோ ஒரே ஆசைக்காடு. அது பிறகுதான் எனக்கேதெரியவந்தது.ஊராருக்கு இப்போதாவது தெரியுமோ என்னமோ.

நிம்மதியாக நாங்கள் வாழ்ந்து கொண்டிருந்தபோது,என்அப்பா, என் தங்கை, தங்கத்துடன், தன் வீட்டில் கொஞ்சம் கஷ்டஜீவனம் நடத்திவந்தார். கேஸ் தோற்ற பிறகு அவருக்கு ஊரிலே முன்பு இருந்ததைவிட மதிப்பு அதிகம். அது ஒரு விசித்திரந்தான். கேஸ், யார்பக்கம் ஜெயித்ததோ, அவர்கள் கடனாளியாகக் கஷ்டப்பட்டார்கள். அப்பாவுக்குச் சொந்தமான மிட்டா அவர்களுக்கும் போய்ச்சேர்ந்ததே தவிர, கேஸை ஜெயிப்பதற்காக அவர்கள் பட்ட அதுப்புத் தீரவில்லை. அப்பாவோ, தன்கவலை வெளியே தெரிய ஒட்டாதபடி நடந்துகொண்டார். எப்போதும்போலச்,சரிகைதுப்பட்டாதான், வெள்ளிப்பூண்போட்டதடிதான், ஊர்ப்பெரிய தனக்காரராகவே வாழ்ந்துவந்தார். இரண்டொரு ஏகர்நிலம், மிச்சமிருந்தது. அது மண்போட்டால் பொன்விளையும் பூமி என்பார்கள், அவ்வளவு நல்ல நிலம். அதிலே கிடைக்கும் வருமானமே ஜீவன ஆதாரம். இந்தக்கஷ்டத்துக்கிடையே தங்கம் கொடிபோல வளர்ந்துவந்தாள். அடிக்கடி நம்வீட்டுக்கு வருவாள். எனக்கு அவளிடம் அபாரமான ஆசை. அவளும் அப்படியே இருப்பாள்என்று பைத்யக்காரி நான் நினைத்தேன். அதுதவறு என்பதைக் கண்டுபிடிக்க ரொம்பநாளாயிற்று, வீட்டுக்கு வந்ததும், "அக்கா" என்று ஆசைவழியக்கூப்பிடுவாள். "வாடி கண்ணே!" என்று நான் அழைத்துக்கொண்டு சமயலறைக்குப்போவேன். என்கூடவே இருந்துசமயல்வேலைக்குதவிப்பாள். பிறகு அவளுக்கு நான் தலைசீவி அலங்காரம் செய்து, என்நகைகளை அவளுக்குப்போட்டுஅழகுபடுத்தி, அவர் வருகிறபோது, அவளிடம் காபியோ, வெற்றிலைத்தட்டோ,

(6-ம் பக்கம் பார்க்க)

# கலைஞர்பால் கருணை காட்டுக.

## இது, தமிழகத்தின் ஏகோபித்த வேண்டுகோள்

கருணை கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறது

ஆயுள் தண்டனை பெற்றுள்ள கலைவாணர்கள்

பாகவதர்-கிருஷ்ணன்

## இருவரையும் தமிழகம் காணத் துடிக்கிறது

இப்போது பொதுமக்களின் பிரதிநிதிகள் சர்க்காரை நடத்தும் இந்நாளில்,

**சிறையில் வதியும் கலைஞர் இருவருக்கும்**

## விடுதலை கிடைக்கும்

என்று தமிழகம் எதிர்பார்க்கிறது

**சட்ட மந்திரி கனம். பாஷ்யம்** அவர்கள், கும்பகோணத்தில் ஆற்றிய சொற்பொழிவொன்றில்,

## பாகவதர் - கிருஷ்ணன்

விடுதலையைப் பற்றி யோசிப்பதாகக் கூறியது, உண்மையிலேயே பொது மக்களுக்கு ஒரு ஆறுதலை அளித்திருக்கிறது—நிச்சயம் விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

★

**ஜனநாயக ஆட்சியில், பொதுமக்களின் கட்சி பேதமற்ற ஏகோபித்த வேண்டுகோள் புறக்கணிக்கப்பட மாட்டாதென்ற நம்பிக்கையுடன், கலைஞர் இருவரையும் கருணைகாட்டி விடுதலை செய்யுமாறு சட்ட மந்திரி கனம். பாஷ்யம் அவர்களைப் பணிவன்புடன் வேண்டிக்கொள்ளுகிறோம்.**

தமிழகத்தில் பல இடங்களிலும், பொது ஸ்தாபனங்கள், கலைஞர் விடுதலை பற்றி விடுத்துள்ள வேண்டுகோளை, மந்திரி சபையின் பார்வைக்குக் கொண்டுவருகிறோம்.

## கீழ்க்கண்ட ஊர்களில் கலைஞர் விடுதலை கோரித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**நகர சபைகள்:—**

திருச்சிராப்பள்ளி
சேலம்
வாணியம்பாடி
தூத்துக்குடி
மதுரை
திருப்பூர்
ஈரோடு
தஞ்சாவூர்
தாராபுரம்
கரூர்
விழுப்புரம்
வேலூர்
திருப்பத்தூர் (N.A.)
இராமநாதபுரம்
நாகபட்டணம்
செங்கற்பட்
திருவாரூர்
கும்பகோணம்
சிதம்பரம்
கோயமுத்தூர்
சீரங்கம்
காஞ்சிபுரம்

**நாட்டாண்மைக் கழகங்கள்:—**

சோழவந்தான்
மணச்சநல்லூர்
இராசிபுரம்
துறையூர்
புதுப்பாளையம்
கோபிசெட்டிபாளையம்
அருப்புக்கோட்டை
கள்ளிகுளம்
போளூர்

**மாவட்ட மன்றங்கள்:—**

மதுரை
செங்கற்பட்
வேலூர்
திருச்சிராப்பள்ளி
திருநெல்வேலி
இராமநாதபுரம்

**இதர ஊர்கள்:—**

பொன்மலை
பட்டுக்கோட்டை
சாக்கோட்டை
நாமகிரிப்பேட்டை
காஞ்சிபுரம்
கல்லிடைக்குறிச்சி
பார்த்திபனூர்
திண்டிவனம்
உரிகம்
பெரியகுளம்
லால்குடி
நீடாமங்கலம்
விருதுநகர்
பண்ருட்டி
நாமக்கல்
குளித்தலை
சாமிமலை
குறிஞ்சிப்பாடி
அம்மாப்பேட்டை
அய்யம்பேட்டை
பாபநாசம்
கொரடாச்சேரி
காரைக்கால்
தேவகோட்டை
புதுச்சேரி
ஸ்ரீவில்லிபுத்தூர்
திருவள்ளூர்
புவனகிரி
கள்ளக்குறிச்சி
நெல்லிக்குப்பம்
கடலூர்
லாலாப்பேட்டை
மாயனூர்
மணக்கால்
வில்வாரணி
கோலார்
பெங்களூர்
நாகர்கோயில்
நாங்குநேரி
வெளிப்பாளையம்
சிக்கல்
பரங்கிப்பேட்டை
பாளையங்கோட்டை
அபிராமம்
புதுக்கோட்டை
கல்லல்
திருநெல்வேலி
சண்முகபுரம்
பொன்னேரி
மம்சாபுரம்
வளவனூர்
பண்ணையூர்
சீர்காழி
மயிலம்
ஒரத்தநாடு
ஜலகண்டாபுரம்
திருச்செங்கோடு
பூவாளூர்
திருவண்ணாமலை
திட்டக் குடி
வேதாரணியம்
விருத்தாச்சலம்
தேவாரம்
போடி நாய்க்கனூர்
அம்பாசமுத்திரம்
கடையநல்லூர்
புகளூர்
வேலூர் (சேலம்)
புலியூர்
பழனி
சூலூர்
செவ்வாய்ப்பேட்டை
தாத்தய்யங்கார் பேட்டை
தவுட்டுப்பாளையம்
முசிரி
அவலூர்ப்பேட்டை
அரந்தாங்கி
தர்மபுரி
கிருஷ்ணகிரி
அரவக்குறிச்சி
பெண்ணாடம்
தென்காசி
சைதாப்பேட்டை
வாடிப்பட்டி
நிலக்கோட்டை
மேலூர்
நீலகிரி
கோயமுத்தூர்
சீரங்கம்
சித்தூர்

ஆகிய ஊர்களில் உள்ள பல சங்கங்களிலும், பல பொதுக் கூட்டங்களிலும் சர்வகட்சிப் பொதுக்கூட்டங்களிலும், சென்னையிலுள்ள பல திறப்பட்ட சங்கங்களிலும் கலைஞர்பால்கருணை காட்டுமாறு தீர்மானங்கள் நிறை வெற்றப்பட்டுள்ளன.

—

விடுதலை

தனிப்பிரதி விலை முக்காலணு

●

மானேஜர், விடுதலை,
2, பாலகிருஷ்ணபிள்ளை தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை.

திராவிட நாடு

காஞ்சி] 2—6—46 [ஞாயிறு

# தூதுவர் திட்டம்

★

விடுதலைக்கொலுமண்டபம், எப்படிக்கட்டப்படும், அங்கு யார் கொலுவீற்றிருப்பர் என்றகேள்வி எழுந்தபோதெல்லாம், சுயராஜ்ய பவனத்திலே, சுதந்தரதேவிகொலுவீற்றிருப்பாள்! என் அன்னை பராசக்தி, பாரதமாதாவே, அங்கு அரசோச்சுவாள்! என்று கூறக்காங்கிரஸ்கட்சி தயங்கினதில்லை. சித்திரம்தீட்டினோர் பலர்; சிந்துபாடினவர் அநேகர். நாம்,விடுதலைக்கொலுமண்டபம் அமைக்கப்படவேண்டும், ஆனால் அந்த மண்டபம், மனமாச்சரியத்துக்கு உறைவிடமாகவும், சுயநலத்துக்குப் பீடமாகவும், இனப்போர்க்காடாகவும் அமைதல்கூடாது, என்பதையே வற்புறுத்திவந்திருக்கிறோம். பிறைக்கொடியின்கீழ் நின்று, எங்கும் நிறைந்ததும், எவர் உள்ளத்திலும் உறைவதும், ஏகமானதும், உருவமில்லாதும், இணையில்லாததுமாக உள்ள ஆண்டவனையே தொழும் பத்துக்கோடி முஸ்லீமையும்,ஒன்றேகுலம் ஒருவனே தேவன் என்ற உத்தமக் கொள்கைவழிவாழவிரும்பும்,நாலுகோடி திராவிடமக்களையும், பாரதமாதாவின் உருவம், பராசக்தியின் பெருமை, ராமநாமத்தின் மகிமை ஆகியவைகளை நம்பித்தீரவேண்டும் என்று வற்புறுத்தும் விதமாக அரசியல் அமைப்பு இருத்தலாகாது; இருப்பின், அந்த அரசு அமளிக்கு வித்திடுவதாக இருக்குமேயன்றி அமைதிக்கு வழி கோலாது என்பதை வலியுறுத்தினோம். இந்தியா ஒருநாடு அல்ல, பிரான்ஸ்போல, கிரீஸ்போல, ஜெர்மனியைப்போல, இது ஒரு சிறுகண்டம். இங்குஒரே இனமக்கள் இல்லை, அங்குஎல்லாம் உள்ளதுபோல. எனவே இங்கு அனைவருக்கும் ஏற்றதாகப்,பிடித்தமானதாக ஒரே அரசியல் அமைப்பு ஏற்படுத்துவதுகூடாது, முடியாது அடாது, நிலைக்காது, நீதியுமாகாது என்று வாதாடினோம்; கேலி செய்யப்பட்டோம்—கண்டிக்கப்பட்டோம்—சந்தேகிக்கப்பட்டோம்.

இதோ விடுதலைக்கானவழி வகைகள் பற்றிய விவாதங்கள் நடைபெறுகின்றன, கவனிக்கட்டும்,நம்மைக்கண்டித்தவர்கள். என்ன நடக்கிறது? எவ்வளவு சிக்கல்கள்? எத்துணை சந்தேகங்கள்? ஏன்?—யோசித்துப்பார்க்கட்டும்.

பிரான்சுக்கோ, இத்தாலிக்கோ, டென்மார்க்குக்கோ,நார்வேய்க்கோ ஒரு அரசியல் அமைப்பு ஏற்படுத்துவதென்றால், இங்கு இதுபோது பேசப்படும் பிரச்னைகள் இருந்திருக்குமா? அங்கே, ஒருநாடு,ஒருஇனத்தின் இடம்; இங்கே அவ்விதம் இல்லை; இதை மறைத்துப்பயனில்லை.

இன்னமும்,தெளிவுபிறக்கவில்லை, திட்டம் நாட்டுமக்களின் நாயகர்களின் பரிசீலனைக்கு விடப்பட்டிருக்கிறது; முடிவு தெரியச் சில நாளாகக்கூடும். நாம் முன்கூட்டி ஆரூடம் கூறவில்லை, ஆனால், மந்திரிகள் வெளியிட்டதிட்டத்திலே, நாம் இதுகாறும் வலியுறுத்திவந்த சில விஷயங்கள் அலட்சியப்படுத்தப்பட்டனவே தேசியத் தோழர்களால், அவ்விதம் அலட்சியப் படுத்தக்கூடிய சாமான்ய விஷயங்கள் அல்ல அவைகள் என்பது, தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

சிக்கல் இல்லாத நிலைமையும், வெறும் சிறுபான்மை, பெரும்பான்மை பிரச்னையும்மட்டும் இருந்திருந்தால், இந்திய அரசியல் திட்டத்தயாரிப்பு, இப்படி இழுத்துப் பறித்துக்கொண்டிருக்கும், காரியமாக இருந்திராது. ஊசிமுனைமேல் நிற்பதுபோல, ஊராளும் முறை தீட்டவந்தவர்கள் அல்லற்படவேண்டியிராது. ஒரு தலைவரின் சிரிப்புமுதற்கொண்டு,அவர்நடந்த நடையின் போக்குவரையிலே நிருபர்கள், கவனித்து, ஒவ்வொன்றுக்கு ஒவ்வொரு வியாக்யானம் தரும், சிரமமான காரியத்திலேஈடுபட்டிருக்கவேண்டிய அவசியமிராது. எந்தெந்த வகுப்புத்தலைவர்கள், எவ்வளவு எவ்வளவு நிமிஷ நேரம் பேசினர், என்பதுபற்றிய நுணுக்கமான ஆராய்ச்சிகளுக்கு அவசியம்இருந்திராது. இவ்வளவும் இவைகளுக்குமேலாகவும்தேவைப்பட்டதுடன், இன்னமும், பூவைத்துப்பார்ப்பது,பழம்கேட்டுப்பார்ப்பதுபோன்ற முறையிலே, காரியம் இருப்பதன் காரணம் என்ன? பல அடிப்படைஉண்மைகளை, நம்மைப் போலச் சிலர் கூறினபோதெல்லாம் இவர்கள் மூலைவாசிகள்,இவர்களின் பேச்சு மன்றம் ஏறுமா, என்று எண்ணி, எதை எதைஅலட்சியப்படுத்தினார்களோ, அவை யாவும்,டில்லியிலும், சிம்லாவிலும், மணிக்கணக்கில், நாட்கணக்கில், பிரபல தலைவர்களின் மூளைக்குமுட்களாக இருக்கக்கண்டனர்.

இந்த நிலையில், காங்கிரசும்—லீகும் சமரசத்துக்கு வரமுடியாது போயிற்று, என்பதை ஒப்புக்கொண்டு, பிரிட்டிஷ் மந்திரிகள், தாமே தயாரித்ததிட்டத்தைக்,கூறியிருக்கிறார்கள். இதனை, ஒவ்வொரு கட்சியும், மிக மிகக் கூர்ந்துகவனித்து வருகின்றன. முடிவான கருத்து வெளியிடப்படவில்லை, ஆனால், முன்னாட்களிலே ஒதுக்கித்தள்ளிவிடவேண்டியவைஎன்றுஎந்தெந்தப் பிரச்னைகளைச் சொன்னார்களோ, அவையாவும், தலைவர்களின்தூக்கத்தைக் கெடுத்துக்கொண்டுதான் உள்ளன. தேசியத்தின்முன்பு வேறு எந்த வாதமும் தலைகாட்ட முடியாது என்று தீப்பொறிப் பேச்சுப்பேசி வந்தவர்கள், இப்போதேனும்தமதுபழைய தவறுகளை உணரத்தலைப்பட்டார்களோ இல்லையோநாம் அறியோம்.

இப்போது, நாம் நமது முடிவானகருத்தை இங்கு கூறவில்லை. திராவிடர் கழகத்தின் கருத்தைத் தலைவர் பெரியார், வெளியிடுவார். நாம் கூறுவது, மந்திரிகளின் திட்டத்திலேகாணப்படும்,சிலபொதுப்படையான விஷயங்களின் விளக்கமேயாகும். இதனைக்கவனிப்போருக்கு, இதுவரை நாம் சொல்லிவந்த பல பிரச்னைகள், எவ்வளவு முக்கியம்வாய்ந்தன என்பதுவிளங்காமற்போகாது. சுயராஜ்யம் என்றால் சுருதி இலயம் கெடாமல் பாரதமாதா சிந்து பாடுவதுமட்டுமல்ல, என்பது இதன் மூலமாக நன்கு விளங்கும் என்று நம்புகிறோம்.

இந்தியா ஒருநாடு, ஆகவே அதற்குப் பொதுவான ஒருமத்திய சர்க்கார் இருந்து, சகல நிர்வாகக் காரியங்களையும் கவனிக்கவேண்டும், அந்தநிர்வாகத்துக்கேஇந்தியா பூராவும்கட்டுப்பட்டாகவேண்டும், என்ற அரசியல் கொள்கையை, பிரிட்டிஷ் தூதுக்கூட்டம் ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்தியா ஒரே தேசமாகக்கருதப்பட்டு, ஜனநாயக முறைப்படி ஆட்சி அமைக்கப்படவேண்டும், அப்படி அமைக்கப்படுவதானால், மெஜாரிடி,(பெரும்பான்மையோர்)யின் ஆட்சிதான் நடைபெறவேண்டும், மெஜாரிடி ஆட்சி என்றால், இந்துக்களே இந்தியாவில் பெருவாரியாக இருக்கிறார்களாகையால் அவர்களின் ஆட்சியே இருக்க முடியும், அந்த மெஜாரடி ஆட்சியின்கீழ்தான், முஸ்லீம் போன்ற மைனாரிடி (சிறுபான்மையோர்) இருக்கவேண்டும், ஆனால் மெஜாரிடியார், மைனாரிடியின் உரிமைகளைப் பறிக்காதிருக்கும் படியான பாதுகாப்புகள்வேண்டுமானால்ஏற்படுத்திக்கொள்ளலாம்; ஆட்சிபுரியும்உரிமை எப்படியும், மெஜாரிடிக்குத்தான் உண்டு; அதுதான் ஜனநாயகம், என்று இதுவரையில் பிரபலகாங்கிரஸ் தலைவர்கள் கூறிவந்த, தத்துவத்தைப் பிரிட்டிஷ் தூதுக்கோஷ்டி ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்தியாவில்உள்ள எல்லாமாகாணங்களும், ஒரு மத்யசர்க்காரில் சேர்ந்தே ஆகவேண்டும், அதுதான் இந்திய ஒற்றுமைக்கு ஆதாரம், என்ற வாதத்தையும், தூதுவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும், நிர்வாகம் ஒரே விதமானதாக இருக்கவேண்டியது அவசியம், ஆகவே அந்தக்காரியத்தைக் கவனித்துக்கொள்ள, ஒரு பலம் பொருந்தியமத்திய சர்க்கார் இருக்கவேண்டும், என்பதையும்தூதுக்கூட்டம் ஏற்றுக்கொள்ளவில்லை.

முஸ்லீம்கள், இந்தியர்களில்ஒரு பகுதியினரே, சிறுபான்மை வகுப்பினர், என்ற காங்கிரஸ் கோட்பாட்டையும் தூதுவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை, அதுபோலவே, முஸ்லீம்கள், சிறுபான்மை வகுப்பினரல்ல, அவர்கள் ஒருதனிஇனம் என்று முஸ்லிம்லீக் சொல்லும் கொள்கையையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

காங்கிரஸ் கோரிய ஐக்கியஇந்தியதிட்டத்தையும்ஏற்றுக்கொள்ளவில்லை, லீக்கேட்கும் பாகிஸ்தானையும் அப்படியே ஏற்றுக்கொள்ளவில்லை. எல்லா மாகாணங்களும் மத்யசர்க்காரிலே இணைக்கப்பட்டாகவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தையும் ஏற்றுக்கொள்ளவில்லை. தனி அரசுரிமை கேட்கும் பாகிஸ்தானையும் அப்படியே ஏற்றுக்கொள்ளவில்லை.

ஏற்றுக் கொள்ளாதவைகளைக் கவனித்தோம்; இனித் தூதுக்கூட்டம்ஏற்றுக்கொண்டுள்ளவைகளைக் கவனிப்போம்.

இந்தியாவின் பாதுகாப்பைக் கவனிப்பதற்காக ஒரு மத்யசர்க்கார் இருக்கவேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர். இதற்காகவேண்டி இந்திய மாகாணங்களும், சமஸ்தானங்களும் பிரதிநிதிகளை அனுப்பிவைத்து ஒருயூனியன் சர்க்காரை நடத்தவேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டனர்.

ஆனால் இந்த யூனியன் சர்க்கார் பாதுகாப்பு,போக்குவரத்து,வெளிநாட்டு விவகாரம், எனும் விஷயங்களைமட்டுமே கவனிக்கும். இந்தக் காரியத்துக்கான விவகாரத்தைக் கவனிப்பதும், இதற்காக ஏற்படும் செலவுக்காக வரிவிதிப்பதும் இந்த யூனியன் சர்க்காருக்குள்ளஉரிமையாக இருக்கும். எனவே, மொத்த இந்தியாவின் ராணுவப் பாதுகாப்புக்காக, ஒருமத்ய நிர்வாகம் இருக்கவேண்டுமென்ற திட்டத்தைத் தூதுக்கூட்டத்தினர் ஏற்றுக்கொண்டனர். ஆனால் அதேபோல மத்யசர்க்கார் என்ற பலமான அமைப்புக்குச் சகல மாகாணங்களும், சகல அதிகாரவிஷயங்களிலும் கட்டுப்பட்டு இருக்கவேண்டிய அவசியமில்லை,என்பதையும்ஏற்றுக்கொண்டுள்ளனர். குறிப்பிடப்பட்ட அதிகாரங்கள் தவிர, மற்ற அதிகாரங்கள் அனைத்தும் அந்தந்த மாகாணங்களுக்கே இருக்கவேண்டும் என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டனர்.

இந்தயூனியனில், சேரவும், சேராமலிருக்கவும், மாகாணங்களுக்கு உரிமைஉண்டு, சில சேர்ந்து நடத்துவதானாலும், சமூகசம்பந்தமான பிரச்னைகள்வரும்போது அந்தந்தச் சமூகப் பிரதிநிதிகளில் பெரும்பான்மையோர் வந்திருந்து சம்மதம் அளித்தால் மட்டுமே சட்டம் செய்யமுடியும்.

இதுமட்டுமல்லாமல், சிலமாகாணங்கள், தங்களுக்குள் ஒருமுடிவு செய்துகொண்டு, தனித்தொகுதியாக அமைத்துக்கொள்ளவும் அதிகாரம் உண்டு. இதன்மூலம்,இனத்தாலோ வேறு எந்த இலட்சியத்தாலோ பாசம் கொண்டுள்ள பகுதிகள், தனித்தொகுதி அமைத்துக்கொண்டு, தனியாகச் சட்டசபை முதலியன நிருவிக்கொள்ளலாம். அதாவது இந்தியாஒரேவகையான மக்களைக்கொண்ட ஒருநாடுஅல்ல இதிலே பல திறப்பட்டவர்கள் உள்ளனர், எனவே வர்க்கத்துக்கு ஒரு வட்டாரம் தேவை என்ற கொள்கையின் அடிப்படை உண்மையைத் தூதுக்கூட்டம் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

ஏற்படும் அரசியல் திட்டம் காளாவட்டத்தில், நடைமுறையில், திருப்திகரமாகத் தோன்றாவிட்டால், அதனைத் திருத்தி அமைத்துக்கொள்ள, அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி, புதுத் திட்டம் அமுலுக்கு வந்து 10-வருஷங்களான பிறகும் ஒவ்வொரு பத்து வருஷங்களுக்குப் பிறகும், அரசியல் அமைப்புத் திட்டத்தைப் பரிசீலனை செய்யும் உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. யூனியன் சர்க்காரில் சேர்ந்திருக்கும் மாகாணமோ,தொகுதி சர்க்காரில் சேர்ந்திருக்கும், மாகாணமோ, தனது சட்டசபையின் பெருவாரியான பிரதிநிதிகள் விரும்பினால் 10 ஆண்டுகளுக்குப்பிறகு, பிரிந்துவிடவும் உரிமைஉண்டு. இதன்படி, மாகாணங்களின் தனி அரசுஉரிமைக் கோரிக்கையும் ஒருவாறு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இனி இவைகளைப்பற்றிக் கூடிப் பேசித்திட்டம் வகுக்க அரசியல் நிர்ணயசபை அமைக்கப்படவேண்டும், இந்தக்காரியம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில், எல்லாக் கட்சிகளையும்கொண்ட ஒருஇடைக்காலசர்க்கார், சகல அதிகாரங்களையும் வகித்துவரவேண்டும் என்றும், தூதுக் கூட்டத்தினர் கூறியுள்ளனர்.

ஏற்றுக்கொள்ளப் படாதவை ஏற்றுக்கொள்ளப்பட்டவை,எவை எவை, என்பதுபற்றிய விளக்கம் மட்டுமே நாம் தந்திருக்கிறோம்.

இனி, இரண்டு வாரங்களுக்குள், அரசியல் கட்சிகள் தத்தம் கருத்தை முடிவாகத் தெரிவித்தபிறகு, மேற்கொண்டு நடவடிக்கை எப்படி இருக்குமென்று பிறகே தெரியும்.

([illegible] பக்கம் பார்க்க)

தூதுக் கூட்டத்தின் திட்டத்தின்படி, நெடுநாட்களாக இருந்து வந்த,

1. இந்தியா ஒரேநாடு
2. இந்தியர் ஒருஇனம்
3. ெமஜாரடி ஆட்சியே, முறை
4. மத்திய சர்க்காரிலேயே இந்தியப் பகுதிகள் அனைத்தும் இருந்தாக வேண்டும்

என்ற, பிடிவாதமான எண்ணங்கள் முறியடிக்கப்பட்டு விட்டன.

இந்தியா, ஒருநாடு அல்ல
இந்தியர் ஒருஇனம் அல்ல

என்ற உண்மை ஒப்புக்கொள்ளப் பட்டு விட்டதாலேயே,

ஒரேசர்க்கார்
அதிலே மெஜாரடிக்கேஅதிகாரம்

என்ற ஏற்பாடு கிடையாதுஎன்று ஆகிவிட்டது.

இந்தத்திட்டம் இன அரசுக் கோரிக்கைகளை எந்த அளவுக்குத் திருப்தி செய்கிறது, யூனியன்சர்க்காரில் சேருவதால் ஏற்படும் கேடுகள், வடநாடு, தென்னாடு தொடர்பால் வரும் தொல்லை ஆகியவைகளைப் பிறகு ஆராய்வோம்.

---

## சர். பாத்ரோ மறைவு

சர். ஏ. பி. பாத்ரோ அவர்கள் 26—5—46-ந்தேதி சென்னை ராயப் பேட்டையிலுள்ள தமது இல்லத்தில் இயற்கை யெய்தினார் என்பதை யறிய வருந்துகிறோம். அவருக்கு வயது 71. இவர் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்காக பாடுபட்ட ஒரு அரும் பெரும் தலைவர். 1921-ல் பனகால் மந்திரி சபையில் இவர் மந்திரியாக நியமிக்கப்பட்டு 1927-ம் வருஷம் வரை கல்வி, மராமத்து இலாகாவை நிர்வகித்துவந்திருக்கிறார். இவரது மந்திரிப் பதவி காலத்தில்தான் சென்னை பல்கலைக் கழகச் சட்டத்திலும் ஆந்திர பல்கலை கழகச் சட்டத்திலும் திருத்தங்கள் செய்யப்பட்டன. இவர் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களில் ஒருவர். 1926ல் மதுரையில் நடைபெற்ற ஜஸ்டிஸ்கட்சி மாநாட்டுத்தலைமை தாங்கினார். 1931ல் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் அகிலஇந்தியத்தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

வகுப்புப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 1930ல் டில்லியில் கூடிய எல்லாக் கட்சி மாநாட்டுக்குத்தலைமை வகித்தார். 1931ல் ஜினிவாவில் நடைபெற்ற சர்வ தேச சங்கத்திற்கு இந்தியாவின் பிரதிநிதியாகச் சென்றார். 1931-32ல் நடைபெற்ற வட்டமேஜை மாநாட்டிலும் கலந்துகொண்டார். 1933ல் கூடிய இந்திய சீர்திருத்த பார்லிமெண்டரி கமிட்டிக் கூட்டத்திலும் கலந்துகொண்டார். 1937 முதல் இராஜாங்க சபையின் அங்கத்தினராக இருந்துவந்தார்.

பொதுவாகப்பார்ப்பனரல்லாதார்நலனுக்காகவும் குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் நலனுக்காகவும் அவர் உழைத்து வந்திருக்கிறார். பார்ப்பனரல்லாதாரின் பரிதாபகரமான நிலைமையை உலகறியச் செய்தவர்களில்இவர் ஒருவர். விவசாயிகளின் குறைகளை நன்கு பரிசீலனை செய்துள்ளார். அவர் எழுதியுள்ள கிராமப் பொருளாதாரம் என்ற நூலைப் பார்த்தால் இதன் விபரம் நன்கு புலப்படும். சர். பாத்ரோஅவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்தது மிகவும் வருந்தக்கூடிய காரியமாகும். பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கே பெரும் நஷ்டமாகும். அன்னாரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்தாருக்கும் அவரது புதல்வர் தோழர் ஏ.வி. பாத்ரோவுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

---

## மருத்துவத் தோழர்களுக்கு ஓர் வேண்டுகோள்

புதுமாதிரியான சவரக்கத்தியும், கத்திரிகளும் புதியதாக வந்திருக்கிறது. தேவையானவர்கள் தாமதமின்றி ஆர்டர்செய்யவும்.

கத்தி 1க்கு விலை ரூ. 5-0-0
கத்திரி 1 க்கு விலை ரூ. 3-8-0
(தபாற்செலவு இனம்)

விலாசம்:

எஸ். பசுபதி பிள்ளை
குரும்பத் தெரு, கரூர் (S. I. Ry.)

---

# ★ நம் குலம் ★

[பே. ந. துணைச்சந்திரன்]

["ஆயிரவைசியன்" என்ற 'இதழ்' சென்னையிலிருந்து வெளிவருவது. வைசிய குல மக்களின் நலனுக்காகப் பாடுபடுவது. அதில், ஓர் கட்டுரையில் சமூக சீர்திருத்தம், ஆரிய ஆதிக்கத்தை அகற்றுவது ஆகிய அரிய விஷயங்கள்எடுத்துக்காட்டப் பட்டிருக்கிறது. அந்தக் கட்டுரை இது.]

"நாம்—வைசியர்—ஆரியரா,திராவிடரா? ஆரியர் என அறைவர்ஒரு சாரார்; திராவிடர் என்பர் மற்றொருசாரார். ஆரியர் எனக் கூறிக் கொள்வோருக்கு நான் ஏதும்கூற முன்வரவில்லை; ஆனால், அவர்கள் இக்கட்டுரையில் காணப்படும்கருத்துக்களைக்கொண்டும், தங்கள் சுய அறிவைக்கொண்டும் திருந்திக் கொள்வார்களாக.

திராவிடர் எனக் கூறிக்கொள்ளும் நம் இனமக்களே! நீங்கள் எக்கணமாவது உங்களுடைய நிலைமை எப்படி அமைக்கப்பட்டு, பின்பற்றப்பட்டு வந்துகொண்டு இருக்கிறது என்பதை நினைத்ததுண்டா? மனிதன் ஒரு எண்ணும் உயிர்; ஆதலின் நீங்களும் ஒவ்வொன்றையும் எண்ணி, சீர்தூக்கிப் பார்த்தல் முறைமை; அப்படிக்கில்லையேல் உங்களுக்கும் ஐந்தறிவு படைத்த மற்ற உயிர்வகைகளுக்கும் என்ன வேறுபாடு?

நாம் இந்தியாவில் நிலைத்துவந்த காலத்து, ஆரியர் மத்திய ஆசியாவினின்று முப்பிரிவினராகப்பிரிந்து ஒரு பிரிவினர் ஐரோப்பாவிற்கும் இனனொரு பிரிவினர் அரேபியா முதலிய வெப்ப நிலங்களுக்கும், மற்றொரு பிரிவினர், கைபர்,போலன் கணவாய்களின் மூலம் இந்தியாவிற்கும் வந்து வடஇந்தியாவில் குடியேறினர் என்பது சரித்திரக் கூற்று.

நாம் சரித்திரத்தின்பாதையைப் பின்பற்றவேண்டுமே தவிர, ஆரியர் "நாங்கள் தேவகுமாரர்கள்" என்று கூறும் பொய்மொழிகளை நம்பலாகாது. ஏனெனில், 'மனிதன் காரணத்தைக் கொள்ளவேண்டுமேயன்றி, கண்டவைகளை நம்பலாகாது. குடியேறிய ஆரியர் சொற்ப ஆடுகளையும், மாடுகளையும் தான் பெற்றிருந்தனர்; அதைவிட அதிகமாக ஒன்றுமில்லை. போர் வீரர்களாயிருந்தால் அங்கே மங்கோலியர்கள் துரத்தியபோது பயந்து ஓடி வந்திருப்பார்களா?

இந்தியா,வான ஆராய்ச்சியிலும் சோதிடத்திலும் முன்னேறியுள்ளது என்று உலகம் புகழ்ந்தது; புகழ்ந்துகொண்டு மிருக்கிறது. அது 'இந்தியாவில் ஒரு சிறுபான்மையோர் பெரும்பாலோரை' உச்சி முதல் உள்ளங்கால்வரை—மதம் என்னும் ஒரு படைக்கலத்தைக் கொண்டு— அடிமைகளாக்கிவைத்துள்ளனர், என்பதைக் கூறத்தவறிவிட்டது. இந்தியாவில் குடியேறிய ஆரியர்களுக்கு — ஏமாற்றும் தொழிலை மேற்கொண்ட ஒரு வகுப்பினருக்கு— ஒரு சிறந்த யோசனை தோன்றிற்றுபோலும்! "செவிக்குணவில்லாத போழ்து சிறிது வயிற்றுக்குமீயப்படும்" என்னும் குறளுக்கு மாறாக வயிற்றுக் குணவில்லாதபோழ்து, அவர்களுடைய தூங்கிக்கொண்டிருந்த மூளைகளைச் சிறிது எழுப்பினர். திடீரென எழுப்பப்பட்ட அம்மூளைகள் மிகத் தீவிரமாக வேலைசெய்து ஒரு முடிவுக்கு வந்தன. அம்முடிவின் பயனே நாம் தற்போது அனுபவித்துக்கொண்டிருப்பது. அவர்களைக் குறைகூறிப் பயன் என்! நாமல்லவோ நம்மைத் திருத்திக் கொண்டிருக்கவேண்டும்.

ஆயிர வைசியர்களே! விழித்தீர்களா? உங்கள் பண்டை நிலைமையினின்று. நீங்கள் பூணூல் அணிகிறீர்களே, அது எதற்காகவென்பது உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் கோயில்களுக்குச் சென்று ஏமாற்றப்படுகிறீர்களா? அல்லது கடவுளன்பைப் பெறுகிறீர்களா? நீங்கள் நடத்தும் சடங்குகள்—கருமங்கள் உங்களுடைய மறு உலக மகிழ்விடத்திற்கா, அல்லது ஏமாற்றும் அந்தணர்களின் வயிற்றை நிரப்புவதற்கா? நீங்கள்திருப்பித் திருப்பி ஓதும் மந்திரங்களின் பொருள் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? தாழ்த்தப்பட்ட தெய்வங்களின் பழைமை உங்களுக்குத்தெரியுமா? அவைகளுக்கு ஏன்பலி செலுத்துகிறோம், இது யாரால்திணிக்கப்பட்டது என்பதாவது தெரியுமா?

முதன்முதலில் பார்ப்பனர் வேட்டையாடும் மரபைச் சார்ந்தவராயினர். பிறரை ஏமாற்றும், மதமென்னுமொரு ஆயுதத்தைக் கைப்பிடித்தவுடனே, வேட்டையாடும் தொழிலை விட்டுவிட்டனர். தாங்கள் வில்லையுடையோர் என்பதன் சின்னமாகவில்லைத் தோளில் மாட்டிக் கொண்டிருப்பதற்குப் பதிலாக நூலை மாட்டிக்கொண்டனர். முதன்முதல் பூணூல் அணிவிக்கும்போது சிறு மான் தோல் துண்டைப் பூணூலில் கட்டிவிடுவர்; அதன் அறிகுறி என்னவெனில், வில்லைக்கையில் ஏந்தி முதல் முதல் மானைச் சுடவேண்டு மென்பது. "அப்படியாகில் அதை நம்மார்பில் ஏன் பொறித்தனர்?" நீங்கள் அவர்களைப் பின்பற்றி ஏமாறும் ஊழியர் என்பதற்கறிகுறி.

காணாத ஒரு பொருளின் அன்பைப் பெறுதற்கு, காணப்படக் கூடிய நீங்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தொழவேண்டிய அவசியமில்லை. நீங்களும் ஒரு காண முடியாத பொருளாகுங்கள், அல்லது அக்காணாப் பொருளிருக்குமிடத்திற்கேகுங்கள். காணாதஒரு பொருளைக் காண்பதாக எண்ணி நேரத்தையும், பொருளையும் செலவழித்து ஒரு கல்லினாலோ அல்லது ஏதாவதொரு உலோகத்தாலோ ஒரு சிலை செய்துவைக்கச் செய்கிறீர்கள்; அதுவும் கொடூரமாக,பயமுண்டாக்கத்தக்கதாகச் செய்து வைத்தவைகளையே தொழுகிறீர்கள். அச்சிலை மழையில் நனைந்தால் என்ன? வெயிலில் காய்ந்தால் தான் என்ன? அவைகளுக்கு அளவிடமுடியாத பெருத்த கோயில்களைச்- சிற்பக்கற்களால் கட்டி வைத்திருக்கிறீர்கள். ஐயோ! இங்கே கணக்கற்ற சகோதரக் குடும்பங்கள்மழையினாலும்,காற்றினாலும், இடியினாலும் அல்லல் படுகின்றனவே! அவைகளுக்குஇரண்டு கன சதுர அடி கொண்ட ஒரு குடிசை............? அல்லது உங்கள் வீட்டு 'வராண்டா'வில்தான்சிறிது இடம்............? நீங்கள் வியாபாரம் செய்யும்பொழுது, தேவைக்கு அதிகமான நிலங்களை வைத்துக் கொண்டு பயிர்செய்யும்பொழுது ஆயிரக்கணக்கான ஏழைகளிடமிருந்து கொள்ளைஇலாபமடித்தும், நூற்றுக்கணக்கான பண்ணையாட்களுக்கு, அவர்கள்செய்த வேலைக்குத்தகுந்த கூலி கொடுக்காமலும் பணத்தை உறிஞ்சிக் கோயிலில் தின்று தூங்கும் அந்தணர்களுக்குத்தந்து, அவர்களுக்கு வேண்டாத ஒருசிறிது உண்டியை "இறைவன் பிரசாதம்"எனக்கூறிக் கொடுக்க அதனை அமுதாகக் கொண்டு உண்கிறீர்கள்; அங்கே அவர்கள்நெய்யுடன்கூடியஉயர்ந்த உண்டிகளைத் தின்று, வேண்டிய சுகங்களுடன் இன்புறுகின்றனர்; அங்கே—கொள்ளையடிக்கப்பட்டார்களே—அவ்வேழைகள் நாள்தோறும் அரை வயிற்றுக்கஞ்சிக்கு அவதிப்படுகின்றனர். கோயிலைப் போற்ற, அந்தணருக்குப் பெரும்பான்மையோரான ஏழைமக்களிடமிருந்து பணத்தை உறிஞ்சித்தர, அவ்விறைவன் உங்களைத் தரகர்களாக நியமித்தானோ? உங்களில் சிலரிடம் இருக்கும் பணமோ, உயர்ந்த உலோகமோ பாசி பிடித்திருத்தலைவிட அதிகமாக உங்கள் மனம் பாசி பிடித்துவிட்டனவே!

பிராமணர்கள் பெருத்த கூட்டங்களாகச் சேர்ந்து ஒவ்வொரு நாளும் இறைவனைக் காண்பதாகக் கூறிக்கொண்டுயாகங்கள்நிகழ்த்தி அவ்வியாகங்களில், உண்ணப்படும் மிருகங்களைப்பலியிட்டுயாகத்தீயில் வதக்கியுண்டு மகிழ்ந்து வருங்கால், புத்தமதமும், ஜைனமதமும் இவர்களின் அட்டூழியங்களைக் குறைக்கத்தோன்றின. அம்மதங்களை "அழிக்க" ஆனமட்டும் முயன்றனர் ஆரியர். அவ்விரு மதங்களும் சிறிது தலைதூக்கவே தங்கள்ஏமாற்றும் மதம் எங்கு அழிந்துவிடுமோ எனப்பயந்து, விட்டுக்கொடுக்காமல் தோற்றும் போகாமல், யாகத்தைமட்டும் மேற்கொண்டு, காட்டேரி, பிடாரி, முனியன்கள், அம்மன்கள், இப்படியாகப், புதிய—ஆனால் தாழ்த்தப்பட்ட தெய்வங்களை (இப்படிப்பட்ட தெய்வங்கள் திராவிடர்க்கே உரியன என்பர் ஒரு சாரார்.) உண்டாக்கி அவைகளுடன் பலியையும் கொடுத்துத் தாழ்த்தப்பட்ட மக்களிடம் தள்ளிவிட்டனர். அப்பாவிகளான திராவிடர் ஏமாந்து, அக்கடவுள்களை மேற்கொண்டனர்;மேற்கொண்டு, உங்கள் கடவுளின் படைப்பின்ஒரு பகுதியை—ஆடு கோழி முதலியவைகளை—பலியிடலாயினர். உங்களைக்கேட்கிறேன்; உங்களை—தாய் தகப்பன்மார்களை — மகிழ்விக்க, உங்களுடைய அன்பைப் பெற, உங்களுடைய மூத்த பிள்ளைகள் இளையபிள்ளைகளைப் பலியிட்டால் நீங்கள் அவைகளை ஏற்றுக்கொள்வீர்களா? இதுபோன்றுதானே அமையும் கடவுளின் மகிழ்ச்சியும், அன்பும்?"

---

## பாரதிதாசன் நிதி

கவிஞர் பாரதிதாசன் அவர்களின் நிதிக்காக இதுவரை சேர்ந்துள்ள தொகை:—

**ரூ. 13,973-5-0**

---

## மதுரைக் கலகம்

மதுரையில் கருஞ் சட்டையினர் மகாநாடு நடந்தபொழுது ஏற்பட்ட கலவரம் சம்பந்தமாக இ. பி. கோ. 147, 148, 149, 323, 332, 436 ஆகியபிரிவுகளின் கீழ் 22 பேர்மீது போலீசார் வழக்குத் தொடர்ந்திருக்கின்றனர்.

மே 12-ம் தேதி யன்று எதிரிகள் சட்ட விரோதமான முறையில் கூடிக்கொண்டு, கலவரம் விளைவித்ததாகவும் கருஞ்சட்டையினர் மீதும் போலீஸ் அதிகாரிகள் மீதும் கற்களை வீசியதாகவும் மகாநாட்டுப் பந்தலுக்குத் தீ மூட்டியதாகவும், இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. எதிரிகள் கைதுசெய்யப் பட்டு வருகின்றனர்.

# இராம இராச்சிய மென்பது அந்தஸ்து வார்த்தை

—[[illegible]]—

ஆலோசனை இல்லாத வார்த்தை, சாதிஆணவ வார்த்தை, பணமமதை வார்த்தை, அதிகாரவார்த்தை, அந்தஸ்துவார்த்தை முதலியவார்த்தைகளில் பல குற்றமுடையதாகவே இருக்கும். அதில்மகாத்மாவுடைய அந்தஸ்து வார்த்தையான இராம இராஜ்ய வார்த்தை குற்றமுடையதே. இராமாயணத்திலிருந்துதான் மகாத்மாகாந்தியும் இராம இராஜ்ஜியத்தைத் தெரிந்தார். நமக்கும் இராமாயணம் இருக்கிறது, ஒத்துப்பார்ப்போம். பெரியஆராய்ச்சிப்பண்டிதர்கள் முன் வந்து சொன்னால், அதையும்கேட்போம்.

இராம இராஜ்யம் இருந்தது, விசேடமுடையது என்றுவைத்துக்கொண்டே பேசுவோம். மனிதனுகப்பிறந்தவன் காலத்தைப் பற்றி மாத்திரம் வசிக்கவில்லை, தேசமாகிய இடத்திலும்வசிக்கிறுன். காலத்தைப்பற்றிப் பார்த்தால் அறுபதினுயிரம்பெண்சாதிகளுடன்வாழ்ந்த இராசாக்கள், தெய்வமே மனிதனுக அவதாரம்பண்ணி உலகை ஆண்டமன்னர்கள், மூன்றுகோடி வயதுடைய இராட்சதன், ஒன்று, பத்து, நூறு, ஆயிரம்தலைகளையுடைய அரக்கர்கள், ஆயிரம்வருஷத்திற்கு ஒருதரம் ஒருதலையும் இரண்டுகையுமாகக்கிள்ளிப், பத்துத்தலைகளையும் இருபதுகரங்களையும் கிள்ளிக்கைலையங்கிரிக்கு அர்ச்சனைசெய்த சிவபக்தஇராட்சதன், விந்தியகிரியிலிருந்து மகேந்திரகிரிக்குப் பாய்ந்து அங்கிருந்துகிஷ்கிந்தகிரிக்குக் குதித்து உலகமெலாம் ஒருவிநாடியில் சுற்றித் தெய்வபூசைசெய்த வானரமன்னன், சூரியன், வாயு, பிரம்மா மற்றத் தேவர்களுக்குப் பிறந்த குரங்குகள், சாகாவரமும், சிரஞ்சீவி வரமும்பெற்ற கரடி, குரங்கு, அண்டமுகட்டுக்கு அப்பாலும் வாலைவளரவிடும் குரங்கு, ஆயுதமேயில்லாமல் எந்தமலைகளையும்பெயர்த்தெறியும்குரங்கு, இவர்கள் எல்லோருடைய அரசாட்சியாக இருந்தது அந்தக் காலம். அதுவு மல்லாமல் தெய்வங்களும், தேவர்களும், முனிவர்களும்தெய்வலோகத்திற்கும் பூலோகத்திற்கும் பாதைபோட்டு நடந்துகொண்டே இருந்தார்கள். இந்தக்காலத்துத் தேசத்தையும் சனங்களையும் பார்த்தால் பௌதிக சாஸ்திரங்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருக்கும் ஐரோப்பியர், அமெரிக்கர்களுடன் சேர்ந்து வசிக்கும்காலம். தெய்வங்களையும் தேவர்களையும் தெய்வலோகத்தில் பார்த்தது போதும், கொல்லன் உலையில்தெய்வங்களையும், விஞ்ஞானிகளிடம் தேவர்களையும் பாருங்கள் என்று சொல்லுகிறகாலம். அந்தக்காலத்து இராச்சியபாரம் இந்தக்காலத்துக்கு எப்படி ஒத்துவரும்? தேவலோகத்துத் தெய்வத்தைப் பார்த்துப் பார்த்துப் பொங்கலும் புளியோதரையும்தான் விருத்தியாயின, விபூதியும் நாமமும்இராச்சியபாரம் செய்தன, உருத்திராட்சமும், துளசிமணியும் மக்களைநடத்தின. பலன் என்ன? கஞ்சிக்கு அலையலாயிற்று, இடுப்பிற்குத் துணியில்லை. இராம மந்திரஜெபம் வயிறு நிறைந்தவர்கள் வாய்க்கு அசைபோட உதவிற்றே யல்லாமல் வயிறொட்டிக் கிடக்கும்மக்களுக்கு ஒன்றும்உதவவில்லையே. ஆஸ்திகம்என்கிறஇராம இராச்சியம் தருமம் என்கிற மேலானநெறியை எப்படி நடத்திற்று என்பதைப்பாருங்கள். நமது ஜனசமூகத்தில் வீரம், போர், அன்பு என்பனவற்றை மிதித்துக் கசக்கி வறியோராக்கி, இழிவடையச் செய்து, பட்டினியால் வாடிஉலரும் சனங்களைப்பற்றிக் கவலையில்லாமல், பாட்டாளிகளைநினையாமல், நம்மை ஒன்றுசேரவிடாமல் உதவாக்கரையான மதத்தின் சிறந்த பிரதிநிதிகள்என்று நின்றுகொழுத்திருக்கும்சோம்பேரிகளையும், ஒழுக்கம்கெட்டுக் கடவுள் அன்னசாலையிலே வசிப்பவர்களையும் இராம இராச்சியம் என்கிற கூற்றினைவழக்கச்சொல்லைத் தொழிலாக உடையவர்களையும் போஷிப்பதே நமது ஆஸ்திகமாய் விட்டது. அதற்காகவே பலதெய்வங்களை உண்டாக்கிக்கொண்டார்கள். ஆச்சாரிகளும் மகாத்மாக்களும் அந்தப்பல தெய்வங்களின் பல அவதாரங்கள் என்றே சொல்லுகிறுர்கள். மற்றத் தேசங்களில் எத்தனையோவீரர்கள், அறிஞர்கள், சனங்களுக்குநன்மை செய்தவர்கள், அநேககருவிகளைக் கண்டுபிடித்தவிஞ்ஞானிகள், இருந்தார்கள், இருக்கிறுர்கள். அந்த நாடுகள் அவர்களை அவதாரமென்றோ மகாத்மாவென்றோ சொல்லுவதில்லை. ஏனெனில் அந்த நாடுகளில் தெய்வங்கள் அவதாரம் பண்ணியதில்லை. கற்பனையால் கதைகள் எழுதி அவைகளைக் காவியம் என்றுதெய்வப்பெயர்வைத்து மனிதனை மனிதன் உயர்வு தாழ்வு உண்டாக்கி, அடிமைகொண்டு ஏமாற்றி வயிறுவளர்க்கும் சாதியும் அங்கில்லை. அவைகளைக்கேட்டு ஏமாறுபவர்களும் இல்லை. பொய்யை மெய்யென்று தத்துவார்த்தம் சொல்லும் சாஸ்திரிகளும் இல்லை. அவைகளைக்கேட்டுப் பகுத்தறிவைப் பயன்படுத்தாப் பண்டிதர்களும் அங்கில்லை. இந்த இராம இராஜ்ஜியத்தைப் பார்த்துத்தான் இரண்டாயிரம்ஆண்டுகளுக்குமுன் பற்பல நாடுகளிலும் "பார்ப்பார் இலையால்" என்றுர் ஒருதிராவிட நாட்டுப்பெரியார். "நூல்எனிலோ கோல்சாயும்" என்றுன் திராவிடக் கிழவி.


இப்பொழுது அவைகளில் பல குறைந்துவிட்டாலும் அந்த நிழலிலேயேவாழ நினைக்கிறுர்கள். அவர்களைத்திருப்திபண்ணவும் மற்றவர்களைச்சூழ்ந்து நிற்கவும் மகாத்மா காந்தி இராமராஜ்யம் என்கிறுர். தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும் என்பதுபோலச்சிறிது இருக்கலாம். குலசேகரஆழ்வார் (அரசர்) வைணவஆச்சாரிகளுக்கு மூந்தினவர். ஆழ்வார்களைச் சேர்ந்தவர். வேதாந்த தேசிகர் வடகலையை உண்டுபண்ணினவர். படிப்புத்தர்க்கத்திலோ அபாரசக்திவாய்ந்தவர். இராமராஜ்யத்தைப் புகழ்ந்ததுடன் பாதக்குறட்டின் இராஜ்யத்தையும் புகழ்ந்தார். எந்த மனிதனும் தன் தனி மனதுடன் ஆலோசனைசெய்தால் உண்மையை உணருகிறுன், கூட்டத்தில்கலக்கையில்கூட்டத்தை விரும்புகிறுன். யோசனை செய்வதில்லை. அப்பொழுது அவர்கள்தரும புலன்கள்மங்கி விடுகின்றன. அதனுலேதான்மகாத்மாகாந்தியும்அந்த இராமனுக வைத்துக்கொள் என்று சொல்லுகிறுர். தன்னிடம் உலகத்தையும், உலகத்திடம் தன்னையும் காண்பவனே உண்மைகாண்பான் என்கிற உயர்ந்த வார்த்தையை மேலான சந்நியாசிகள் சொல்லுவார்கள், அதுகேட்டுச்சம்சாரிகள் தங்களிடமுள்ள சிறந்த வஸ்துக்களைச் சந்நியாசிகளுக்குக் கொடுப்பார்கள். ஆனுல்பொதுதெய்வத்தின் பொது விதிக்கு அடங்கி நடப்போரைச்சாதிக்கட்டாலும்சமயக் கொடுமையாலும் தன்புறத்துகையில், அவைகளுக்குச் சந்நியாசிகள் முகமலர்ச்சியுடன் ஆசீர்வாதம் செய்வார்கள். இப்படியே உண்மைக்குப்பரிந்து பேசுபவர்கள்இல்லாமற்போயிற்று. இப்படியேநமது வாழ்க்கை, நமது படிப்பு, பழக்கங்கள், தெய்வக்கதைகள், உபதேசங்கள், ஏற்பாடுகள் இவைகளால் நமது வாழ்க்கை இன்பங்கள் வற்றிப்போயின. எனவேதான் சிறு கூட்டமானபலசாதியார்களுக்கும் நாகரிகமென்ற சொல்லிக்கொள்ளும் பெருங்கூட்டமான நாம் அடிமைப்பட்டோம்.

ஆதிமனிதர்கள், ஆகாரம், இடம் பெண் முதலியவைகளைப் பங்கு கொள்வதில் சண்டை உண்டாயிற்று. அதைப்பகிர்ந்து கொடுக்க அவர்களிலிருந்தே ஒருபலசாலியும் ஏற்பட்டான். அதிலிருந்தே அவசியமும் அதிகாரமும் பெருகி அரசாட்சியும் ஏற்பட்டது. மண்ணை ஆண்டவர்கள் கோடி, மலையை ஆண்டவர்கள் கோடி, இனியும் ஆளப்போகிறவர்கள் எத்தனை கோடியோ என்றபடி இராமஇராஜ்யம் இருந்ததாகவே வைத்துக்கொள்வோம். எந்தமனிதனும் ஆசை, கோப தாபத்துடன் தான் அரசாட்சி செய்வான். அப்பொழுது அதைக்கூட்டியும்குறைத்தும் சனங்கள் சொல்லுவார்கள். இராமராஜ்யம் கூட்டிச் சொல்வதற்கு ஏற்றதாக இருந்தாலும் நிலைத்த உண்மைகளும் பலன்களும்இருக்க வேண்டுமே. புலியும் பசுவும் ஒருதுறையில் தண்ணீர் குடித்தது. எலியும் பூனையும் ஒருபொந்தில் வாழ்ந்தது, தேளும் பாம்பும், சென்னும் மனிதனும் ஒரேபாயில் படுத்திருந்தன இராம இராஜ்யத்தில் என்பது உண்மையாகவிருந்தாலும் பலன் என்ன? யாருக்கும் பகையில்லை என்னும் கருத்தைக்காட்டுவதானுலும் அது இயற்கைக்கு, உலக உற்பத்திற்கு, உலக அமைப்புக்குநேர் விரோதம். புலியும் பூனையும் புல்லைத் தின்று ஜீவிக்குமோ? அப்படியானுல் அதன்வம்சமே அழிந்தல்லவா போகும். மகாவிஷ்ணு உலகத்தையும் அதிலுள்ளவைகளையும் சிருஷ்டித்தார் என்பது நமதுகொள்கை. அந்தமகாவிஷ்ணுவே உலகத்தில் மனிதனுகப்பிறந்துதன்சிருஷ்டிக்கு நேர்விரோதமாகச் செய்வார் என்பது பொருந்தவில்லையே. இயற்கைக்கு விரோதமாக ஏடெழுதி அதை உபதேசித்து வயிறுவளர்த்த குற்றம்தான் எல்லோருக்கும்கால், அரைவயிறு உண்டுசாகவும், பிச்சை வாங்கவும் ஏற்பட்ட தென்பதை யாவரும் உணரவேண்டும். இராம தீர்த்தர் சொன்ன சிலவார்த்தைகளைக்கீழே தருகிறேன்.

"இமயமலையில் செழித்தோங்கி வளர்கின்ற மரங்களுக்கு எனது உஷ்ணத்தையும் தெளிவையும் கொடுத்துவிட்டேன்; அதைக் கொண்டே நீங்களும் திருப்தியடைந்து வளரவேண்டும்; உங்களுக்குமறுபடியும் அவ்விதமேன்மையும் சக்தியையும் கொடுக்க மாட்டேன் என்று பம்பாயிலுள்ள மாமரங்களிடம் சூரியபகவான் சொன்னுல் இந்த மரங்கள் செழித்தோங்கி விருத்தியாகா. தோட்டத்திலுள்ள ஆப்பில் பழங்கள்மேல் வீசும் சூரிய உஷ்ணத்தைக்கொண்டுதடாகத்தில் வளரும் அல்லி மலர்கள் புஷ்பித்துவிடுமோ? இதேமாதிரி புத்தபகவான், ஏசுகிறிஸ்து, முகம்மது நபிநாயகம், முதலியவர்களிடம் தோன்றிய ஞானத்தைக் கொண்டு ஷேக்ஸ்பியர், நியூட்டன், ஸ்பென்சர் முதலியவர்கள் வசிக்க முடியாது. ஆதலால் நாமும் நமது தற்கால விஷயங்களையெல்லாம் நமது முயற்சியைக்கொண்டே தீர்மானித்துவிடவேண்டும். முற்காலத்தில் விளங்கிய நமதுமதிப்பிற்குரிய முனிவர்கள், ரிஷிகள், அவதாரங்கள் முதலியவர்களுடைய திருஷ்டியினுல் பார்த்தால்நமக்குஒளியைத்தராது. நாமே அறிவு பெற்றுப் பார்க்கவேண்டும் என்றுர்."

எந்தத்தேசத்தில் சனங்கள் காம இச்சையை இஷ்டம்போல் விடாமல் ஒருகட்டுக்கு அடங்கி நடக்கிறுர்களோ அந்த இராஜ்யம்விசேடமுடையதாக இருக்கும். இல்லையேல் பலஇன்னல்களுக்குள்ளானதாகும். இராமாயணத்தைப்பார்த்தால் காமம் ஒழுங்குமுறை தவறியேநடந்திருக்கிறது. காமத்தை மனதில் கொள்ளும் பெண்ணுேடு கலவி செய், மைதுன இச்சையுப் புத்திரோற்பத்தியால் விருப்பு என்கிறபெரும் நீதிகள் இராமராஜ்யத்தில்இல்லை. மானைத்துரத்திச்சென்ற இராமனை, தேடிப்பார்த்துவா என்று சீதை இலட்சுமணனிடம் சொன்னுள். மறுத்தான் இலட்சுமணன்; போனவன் மனைவி இருப்பவனுக்கென்றுநினைத்தையோ என்றுள் சீதை. வண்ணுன் பெண்சாதி கோபித்துப்போய் அன்னியன்வீட்டில் ஒருநாள் தங்கி மறுநாள் வீடு வர வண்ணுன் சந்தேகப்பட்டுஒருநாளாயிருந்தாலும், என் சந்தேகம் ஒழியாது, இராமனுடைய நீதியும் ஒழுங்குமல்ல என்னுடையது, உன்னைச்சேர்க்கமாட்டேன், என்றுன். இவைகளை ஆலோசித்துப் பார்த்தால் விபசாரத்தின் பெருக்கும், ஆண் பெண் அவநம்பிக்கையும் விளங்குகிறது. அந்தப்புரத்திலிருக்கும் அரசப்பெண், சிதைக்கும் தறையிலேயே கிடப்போனுக்கும் விபசார நுட்பங்களும் அவநம்பிக்கைகளும் தெரிவதானுல் அந்தஇராமராஜ்யத்தை என்னென்பது! கம்பன் கவியின்பம் ஆண் பெண் பாதாதி கேசம்வரைப் போவதையும் கவனியுங்கள். இன்னும் பலஇருக்கின்றன.

அடுத்தது அவதாரங்களின் பிரயம் என்பதுபற்றி எழுதுகிறேன்.


உறையூர்

எஸ். எம். எஸ். ஆர். பி.

சொந்தக் கைத்தறி கலர்புடவைகள் & 3-அகலம் தோத்திகள், சரிகை அங்க வஸ்திரங்கள்.

100, 80-கெ. நூலில் தயார் செய்யப் பட்டது. உத்திரவாதமுள்ள சாயம். உறுதியான—உடை, சுத்தமான—சரிகை, உயர்தரமான—ரகங்கள், நாணயமான விலைகள்.

S. M. S. R. பாலசுந்தரம்,
கைத்தறி ஜவுளி வியாபாரம்,
34, பஞ்சவர்ணஸ்வாமிகோவில் தெரு,
உறையூர் p. o. திருச்சி.



ஜெயராம்காயசுத்திலேகியத்தைச் சாப்பிடுங்கள்
தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி, வயிற்றுவலி, புளித்தேப்பம், வயிற்றுப்பிசம், குடல்வாதம், இடுப்புவலி, மூலநோய், இவைகளைப்போக்கிமலத்தைச்சுகமாய்ப்பிரிக்கும்

அற்புத சஞ்சீவி

ஜெயராம் காயசுத்தி லேகியம்

1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2—2—0.
வி. பி. பி. வேறு.

ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் கீழ்வீதி, கும்பகோணம்.



மூல வியாதிகளுக்கு யௌவன பிராஷ்

கருணைக்கிழங்கு லேகியம்! ஆப்ரேஷன் பயன்தராது

மூல முளைகள், ரத்தம், சீழ்வடிதல், குத்து, வலி, மலபந்தம், வாய்வு பவுத்திரக் கட்டிகள், 3-வேளை மருந்தில் உபத்திரவங்கள் தணிந்து சுகம் காணலாம். இதுபோல்எந்த மருந்திலும் சுகம் காணமுடியாது.

12 நாள்யௌவன பிராஷ் ரூ. 3 சரஸ்வதிவைத்தியசாலை பழனி, S. I.

ஸ்டாக்கிஸ்ட்ஸ்:—
T. N. சொக்கலிங்கம்பிள்ளை மருந்து ஷாப் மதுரை.
தி. மெடிகல் & ஜெனரல் ஸ்டோர்ஸ ஜன்லி பொள்ளாச்சி.
Banjo Pharmacy, மருந்துஷாப் உடுமலைப்பேட்டை.
சரஸ்வதி மெடிக்கல் ஸ்டோர், நாமக்கல்.


## ரங்கோன் ராதா

1-ம் பக்கத் தொடர்ச்சி

ஏதையாவது கொடுத்து அனுப்புவேன். அவர் அவளைப்பார்த்ததும், "பலே! தங்கமா? எவ்வளவுஅழகடி ரங்கம் உன் தங்கை!" என்று கூறுவார். "அக்கா! அத்தானைப்பாரேன், கேலி செய்கிறார்" என்று தங்கம் சொல்லுவாள். "என்னுங்க! நம்ம தங்கத்துக்கு இந்தநகை எல்லாம் போட்டா, எவ்வளவுஅழகாகஇருக்கு, பார்த்திங்களா?" என்றுநான்கேட்பேன். "அதுக்கென்ன சந்தேகம்! இப்ப என்ன தங்கத்துக்கு ஒரு தனவந்தன் புருஷனைக் கிடைத்துவிட்டா, வைரமாக இழைத்துவிடுகிறான். தங்கம் அதிர்ஷ்டக்காரிதான், பாரேன்" என்று அவர் சொல்லுவார். தங்கம்,வீட்டுக்குப் போகும்போது, நகைகளைக்கழற்றி என்னிடம் கொடுப்பாள். கொடுக்கும்போது சொல்லுவாள், "அக்கா! அத்தான் சொன்னாரே எனக்கு அதிர்ஷ்டம் என்று; அந்த அதிர்ஷ்டம், எனக்கு, இப்படி, என்றைக்காவது ஒருநாளைக்கு அட்டிகையும் செயினுமாகக்கொடுத்து உடனே மறுபடி திருப்பி வாங்கிக்கொள்ளுது, பார்த்தயா?" என்பாள். எனக்குக்கொஞ்சம் பரிதாபமாகத்தான் இருக்கும் அதைக்கேட்க. "ஏண்டி கண்ணே! போட்டுக்கொண்டுதான் போயேன் வீட்டுக்கு" என்று நான் சொல்வேன். "போக்கா போ!" என்று கூறிவிட்டுத்தங்கம் போய்விடுவாள்.

நகைகளைப்பூட்டி நான் அவளுடைய அழகைக்கண்டு ஆனந்தப்பட்டுவந்த சமயங்களிலெல்லாம், அவள் அசூயைகொண்டிருந்தாள், என்பது எனக்குத்தெரியாமல் போயிற்று. சிறுவயதிலேயே அவள் மனதில் பொறாமை அவ்வளவுகுடி ஏறிவிட்டது. வீட்டிலே தனக்குத் தரித்திரமும், எனக்கு என்புருஷன் வீட்டிலே தனபாக்கியமும் இருந்தது, அவளுக்குப் பொறுக்கவில்லை, நாளாகவர்க அவள்மெள்ள மெள்ளக் கேலிபேசும் பாவனையிலே, தன் பொறாமையைக்கொட்டத்தொடங்கினாள். இந்தச்சமயத்திலேதான் அவள், பருவமடைந்தாள். என் கண்களுக்குஒருபெரிய விருந்தாக விளங்கினாள். அவளுக்கு நீராட்டின அன்று, நான்அடைந்த பெருமையும் பூரிப்பும் இவ்வளவு அவ்வளவு என்று கூறமுடியாது. என்நகைகளை எல்லாம் எடுத்துக் கொண்டுபோய், அவளுக்குப் பூட்டி, அழகுபடுத்த வேண்டுமென்று நான் ஆவலாகச் சென்றேன். அவளோ, ஒரே அடியாக, அவைகளைப்போட மறுத்துவிட்டாள். அப்பா, என் புருஷர், யார் சொல்லியும் கேட்கவில்லை.

"என்னடி தங்கம்! இன்று நல்ல நாள். இன்றுசந்தோஷமாகஇருக்க வேண்டும். நமக்கு இருக்கும்நகைகளைப்போட்டுக்கொண்டு மகிழ்வாக இருக்க வேண்டியதினம். நீ ஏன் இன்று இப்படி முரட்டுப்பிடிவாதம் பேசுகிறாய்" என்று நான் கொஞ்சம் கோபத்தோடு கேட்டேன். அந்தப் பொறாமைக்காரி கொஞ்சங்கூடத் தயங்காமல் சொன்னாள், "அக்கா! வேண்டாமென்றால் விட்டுவிடு. ஏன் என் உயிரை வாங்குகிறாய். எனக்கு, நகைநட்டு வேண்டாம், இரவல் நகைகளைப்போட்டு மினுக்கிக் கொள்ள வேண்டுமா என்ன? சந்தோஷம், சந்தோஷம்என்றுசொல்கிறாயே, யாருக்குச் சந்தோஷம், உனக்கா, எனக்கா? உன் நகைகளை எனக்குப்போட்டு, ஊரார் அதைப்பார்த்துத்,தங்கம்போட்டுக்கொண்டிருக்கும் நகைகளெல்லாம், ரங்கத்துடையது என்று கூறும்போதுகேட்டு நீ சந்தோஷமடைகிறாய். அதற்குத்தானே, இவ்வளவுதூரம் பேசுகிறாய். இதிலே எனக்குஎப்படிச்சந்தோஷம்இருக்கும்?" என்றாள். நான், கண்களில் நீர்ததும்ப நின்றேன். வயது பதினைந்துதான் பூர்த்தியாயிற்றுதங்கத்துக்கு. அவள் மனதிலே இவ்வளவு பொறாமை நெளிவதுகண்டு நான் திடுக்கிட்டுப் போனேன். நான்மேற்கொண்டுஏதும்பேசவே இல்லை. ஒருவாரகாலம், என்மனம் படாதபாடுபட்டது. பிறகு நானாகச் சமாதானப்படுத்திக் கொண்டேன், தங்கம் சிறுபெண், நகைநட்டு இல்லையே என்ற மனக்கஷ்டத்தால், ஏதோ உளறினாள்,கிடக்கட்டும்; அவள் சுபாவம் அப்படி இருக்கிறது என்று. இருந்தாலும் தங்கம், என்னிடம் பொறாமை கொண்டிருக்கிறாள் என்பதுவிளக்கமாகத் தெரிந்துவிட்டது. வேதனை உண்டயிற்று. உன் அப்பாவிடம் இதைப்பற்றிப் பேசினேன், அவர், இதுசர்வசாதாரணம்என்று அலட்சியமாகச் சொல்லிவிட்டார். எனக்கு இது அவ்வளவு அலட்சியமாகக் கருதக்கூடிய விஷயமாகத் தோன்றவில்லை. கவலையே இல்லாமலிருந்துவந்த என் மனதிலே ஒரு கவலை பிறந்து விட்டது. என் மனதிலேயும் தங்கத்திடம், அசூயை தோன்றிவிட்டது. அதற்குமுன்பெல்லாம், உன் அப்பா, என் வீட்டுப்பக்கம் போய்வராமல் ஒரு நாலுநாள் இருந்துவிட்டால், நான் அவரிடம் கோபிப்பது வாடிக்கை, "அது என்னங்க, அப்பாவும் தங்கமும் எப்படி இருக்கிறார்கள் என்று பார்த்துவரக் கூடாதா? நாலைந்து தெருவுக்குஅப்புறம் இருக்கிறார்கள், பத்துமைலா எட்டுமைலா. வீட்டுக்கு வருகிறபோது ஒரு நடை அப்படியே போய் வரக்கூடாதா என்றுகேட்பேன். அவர் கடையில்வேலை, கணக்கப்பிள்ளை வீட்டில் காரியம் என்று ஏதாவது சாக்குச் சொல்வார். அப்படிப்பட்ட நான், அவராக, "இன்று உன் அப்பாவைப் பார்த்தேன்" என்று கூறும்போது "கடைவீதியிலா?" என்று கேட்பேன், "இல்லை! வீட்டுக்குப் போயிருந்தேன்"என்பார்,உடனே எனக்கு முகம் ஒரு விதமாகமாறிவிடும். முதலிலே எனக்கே அந்தச் சுபாவம் பிடிக்கத்தான் இல்லை. ஆனால் அதுவளருவதைத் தடுக்க என்னால்முடியவில்லை"ரங்கம்! வெள்ளரிக்காய் என்றால் தங்கத்துக்கு இஷ்டமல்லவா? கிராமத்திலிருந்து நாளைக்கு ஒரு கூடைகொண்டுவரச் சொல்லி இருக்கிறேன். 'கொண்டு போய்க்கொடு தங்கத்துக்கு" என்பார் உன் அப்பா. எனக்குத் திடீரென்று கோபம்வரும். காரணமின்றி நான் கோபித்துக் கொள்கிறேன் என்று அவர் எண்ணிக் கொள்வார். "தங்கத்துக்கு எது பிடிக்கும், என்ன தேவை என்பதிலே இவருக்கு என்ன அவ்வளவு அக்கரை? எனக்கு மாம்பழம் என்றால் உயிர். ஆயிரம்தடவைசொல்லி இருக்கிறேன், அது ஒரு அரை டஜன் வாங்கிவரக்காணோம், அவளுக்கு வெள்ளரி பிடிக்குமாம், ஒருகூடை வருகிறதாம், இதை நான் சுமந்துகொண்டுபோய்,அவளுக்குத்தருவதாம்." என்று எண்ணுவேன், கோபம் பொங்கும். மகனே! இந்தப்பொறாமை இருக்கிறதே, அதைப்போல,வேகமாகப் பரவும் நெருப்பு வேறே கிடையாது. நிமிஷத்துக்கு நிமிஷம் அது வளர்கிறது. என்உள்ளத்தை அந்தத் தீவேகவைத்தது. "வெள்ளரி வேண்டுமென்று தங்கம் கேட்டாளா?" என்றுநான் கேட்டேன், புருஷனைமனைவிகேட்பதைப் போல அல்ல, குற்றவாளியை அதிகாரி கேட்பதுபோல. அவர் சாதாரணமாகவே "அவள்கேட்கவில்லை நீதானேசொல்லுவாய்,தங்கத்துக்கு வெள்ளரிஎன்றால் பிரியம் என்று" என்று சொன்னார். என்கோபம் குறைவதற்குப்பதிலாகவளர்ந்தது. "அவள்ஏதோ வாய்திறந்து வெள்ளரி வேண்டுமென்று கேட்டாள், ஆசைப்பட்டுக் கேட்டபிறகு எப்படி வாங்கிக்கொடுக்காமல் இருப்பது என்றுஎண்ணி இவர் வெள்ளரி வாங்கியிருந்திருந்தாலும் பரவாயில்லை. அவள்கேட்கவே இல்லையாம். இவராக அவளுக்கு எந்த வஸ்துமேல்பிரியம் என்று யோசித்து, நான் எப்போதோ சொன்னதைக் கவனம் வைத்திருந்து, வெள்ளரி தருவிக்கிறாரே, எவ்வளவு அக்கரை அவள்விஷயத்திலே? ஏன்?" என்றுயோசிக்கலானேன். கோபத்துடன் போக்கிரித்தனமும் கலந்தது. "தங்கத்துக்கு எதுஎது இஷ்டம் என்பதைப்பற்றிய ஆராய்ச்சியிலே மும்முரமாக ஈடுபட்டு விட்டீர்களோ?" என்று கேலியாகக்கேட்டேன். "அத்தான் என்று இருந்தால் அந்தஅக்கரை இராதோ?" என்றுஅவர் பதில்கூறினார். அதுஎன்னைச் சவுக்கால்அடித்ததுபோல இருந்தது. கொஞ்சநேரம் மரம்போல்நின்றேன். பிறகு கேட்டேன், "ஆமாம்! நேற்றுப் போயிருந்தீர்களா வீட்டுக்கு" என்று. "இல்லையே நாலுநாளாகிவிட்டது நான்போய்" என்றுஅவர் கூறினார். என் ஆத்திரம் கட்டுக்கு அடங்கவில்லை. "ஐயயோ! ஏன் பாவம் இவ்வளவு கஷ்டம்! இப்போதே ஓடிப்போய் அவளைப் பார்த்துவிட்டு வந்துவிடுங்களேன், தலைகிலை வெடித்துவிடப் போகிறது" என்று சொல்லிவிட்டுச் சரேலெனச் சமையற்கட்டுக்குப் போனேன். அவர்கூடத்திலேசிரித்துக் கொண்டிருந்த சத்தம் என் காதிலே விழுந்தது. நான், வற்றல் வறுப்பதற்காக, பாணலில் எண்ணெய் ஊற்றி வைத்திருந்தேன். அடுப்பெதிரே உட்கார்ந்துகொண்டிருந்தேன், சடசடவெனச்சத்தம் கேட்டது, அப்போதுதான் எனக்குத்தெரிந்தது, நான்அழுதுகொண்டிருந்தது. கொதிக்கும் எண்ணெயில் என்கண்ணீர் வீழ்ந்து, அந்தச் சத்தம் உண்டாயிற்று. அதுவரையில் நான்அழுததில்லை புருஷன்வீட்டிலே! அன்று அழஆரம்பித்தேன். அந்தஅழுகை இன்னும் ஓயவில்லை; இனியும் ஓயாது.

(தொடரும்)

## வெளிவந்துவிட்டது


ஜனாப் A. A. ரவூப் எழுதிய "Meet Mr. Jinnah" என்ற புத்தகத்தின் கடைசி அத்தியாயம்—தமிழில் விலை: 0—4—0.

கிடைக்குமிடம்:—
சங்க காரியாலயம்,
காரைக்கால்.

## மணமகள் தேவை

வேளாளர் குடும்பத்தில் பிறந்து படித்து வேலையிலமர்ந்திருக்கும் 22-வயதுள்ள வாலிபனுக்கு மணமகள் தேவை. ஜாதியைப்பற்றிய தடை இல்லை. அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

திராவிட நாடு,
காஞ்சிபுரம்.


கிளி மார்க்
பட்டணம் பொடி.

நிறம் காரம் மணத்தில் நிகரற்றது.
இன்றே உங்கள் தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள்.


Edited Printed and Published by C. N. Annadurai, M.A., at "Dravida Nadu" Press, 317-319 Hodgsonpet, Conjeeveram.